பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆனி 29 (12—7—72) புதன் | வெளியூர்: ஆனி 30 (13—7—72) வியாழன் [இதழ்: 24

விவசாயநிலத்துக்கு மீண்டும் நில வரி

இந்திரா காங்கிரசு ஆளும் மாநிலத்தில் இந்த நிலை

போபால், ஜூலை 12—

மத்தியப் பிரதேசத்தில் 10 ஏக்கர் வரையிலான நில உடைமைகளுக்கு நிலவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது; இப்போது திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 'விவசாய நில வரி' என்ற பெயரில் மீண்டும் அது வந்து விட்டது.

திருத்தப்பட்ட 'பட்ஜெட்'டில்
(3-ம் பக்தி பார்க்க)

மத்திய அரசின் யோசனைகளைச் செயல்படுத்தும் தமிழக அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் காங்கிரசு கூட்டுச் சேருவது முறைதானா?

தலைமைப்பீடத்திலேயே தத்தளிப்பு

இக்கட்டான நிலையிலிருந்து விடுபட முடிவு

நிலப் பிரபுக்களுடன் தமிழ்நாடு இந்திரா காங்கிரசார் இணைந்திருப்பதற்கு எதிர்ப்பு

கூடா நட்பு பெருஞ்சுமை எனக் கருத்தறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 12

விவசாயிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டு அதற்கு ஆதரவு கொடுப்பதன் மூலம், பணக்கார நிலப் பிரபுக்களையும் — நிலவுடைமைக்காரர்களையும் தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரசும் — வலது கம்யூனிஸ்டுக் கட்சியும் ஆதரிக்கின்ற சூழ்நிலை, இந்திரா காங்கிரசுத் தலைமையின் ஒரு பகுதியினருக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தக் கிளர்ச்சியின் எதிரொலி பிற மாநிலங்களில் ஏற்பட்டால் அதன் விளைவு என்னவாகும் என்பதும் யோசிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் ஆந்திர மாநில அரசு மின் கட்டணத்தை 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தப்போவதாக அறிவித்திருப்பது நினைவுகூரப்படுகிறது.

'பிற்போக்குவாதிகள்' என்று அழைக்கப்பட்டுவரும் பழைய காங்கிரசுடனும் — சுதந்தராக் கட்சியுடனும் இந்தக் கிளர்ச்சியின் மூலம் இந்திரா காங்கிரசு தோழமைகொண்டிருப்பது, காங்கிரசுத் தலைமை வட்டாரத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

புதுவகையான கூட்டு உருவாகியிருந்தபோதிலும், காங்கிரசின் நிலைமை தர்மசங்கடமாக ஆகிவிட்டிருக்கிறது; சிண்டிகேட்டுடனும் — சுதந்தராவுடனும் இணக்கமாகிவிடுவதைக் காட்டிலும், இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு அளிக்காது மெள்ள இதிலிருந்து விடுவித்துக்கொள்வதே நல்லது' என்று இந்திரா காங்கிரசுத் தலைவர்களிடம் கருத்து உருவாகியிருக்கிறது.

இதுபற்றி டில்லியிலிருந்து 'மெயில்' ஏட்டின் சிறப்புச் செய்தியாளர் எழுதியிருக்கும் செய்திக் கட்டுரையிலிருந்து, 'இந்த இக்கட்டான நிலையிலிருந்து எப்படியும் மீண்டுவிட வேண்டும் என்பதில் இந்திரா காங்கிரசுக் கட்சியின் தலைமைப் பீடத்திலிருப்பவர்கள் மிகுந்த கவலையுள்ளவர்களாக இருக்கின்றனர்'' என்பது தெரியவருகிறது.

கிராமப்புறத்து பயிர் நிலச் சீமான்களைப் பாதிக்கக்கூடிய ஒன்றுக்கான போராட்டம்தான் இது என்றாலும், இதில் இந்திரா காங்கிரசாரும் பங்கேற்றுச் செயல்படுவதையே மத்திய அமைச்சர்களான சி. சுப்பிரமணியமும் — மோகன் குமாரமங்கலமும் விரும்புவதாக டில்லி வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

"மத்திய அரசு அப்போதைக்கு அப்போது தெரிவிக்கின்ற யோசனைகளுக்குச் செவிமடுத்து — அவற்றைச் செயலுக்குக் கொண்டுவரும் ஒரு மாநில அரசுக்கு எதிரான கிளர்ச்சி நடைபெற்றால், அதில், மத்தியில் ஆளும் கட்சியாக விளங்கும் இந்திரா காங்கிரசார் சேருவது முறைதானா'' என்ற கேள்வியும், அக்கட்சியின் தலைமையிலுள்ள ஒரு பகுதியினரிடையே எழுந்துள்ளது.

'தி. மு. க.-வுக்கு அடுத்த கட்சியாக ஸ்தாபன காங்கிரசு' இருக்கின்ற வரையில், தி. மு. கழக அரசுக்கு எதிரான சக்திகளைத் திரட்டி நிறுத்தவோ அல்லது தி. மு. கழக அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றவோ தமிழ்நாட்டிலுள்ள இந்திரா காங்கிரசால் முடியாது"

என்று, 'மெயில்' ஏட்டில் அதன் டில்லிச் செய்தியாளர் எழுதியிருக்கிறார்.

"இந்தக் கிளர்ச்சியின்போது ஏற்பட்டுள்ள 'கூடா நட்பு' இந்திரா காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரும் சுமையேயன்றி, அதனால் அக்கட்சிக்கு ஆதாயம் எதுவும் இருக்க முடியாது'' என்ற கருத்தும் அக்கட்சித் தலைவர்களிடம் நிலவுகிறது.

உலக பாங்கி வழங்கிய வேளாண்மைக் கடன்

தவணையை நீடிக்கக் கோரிக்கை

பெங்களூர், ஜூலை 12—

"வேளாண்மைப் பணிகளுக்காக உலக பாங்கி வழங்கியுள்ள ஏழாண்டுக் கடன்களைப் பத்தாண்டுக் கடன்களாக மாற்றித் தர வேண்டும்'' என்று மாநில நிலவள வங்கிகளின் தலைவர்கள் கோரியுள்ளனர்.

தமிழ்நாடு உட்பட ஏழு மாநிலங்கள் இந்த மாதிரியான கடன் ஒப்பந்தங்களில் ரூ. 250 கோடி அளவில் சென்ற இரண்டு ஆண்டுகளில் கையெழுத்திட்டுள்ளன.

பருத்தி — பாக்கு விலை வீழ்ச்சியாலும், கடன் பாக்கி வசூலகள் தாமதப்படுவதாலும், கடன் வாய்தாவை நீட்டித் தரவேண்டும்'' என்று கோரப்பட்டுள்ளது.

"நில உச்சவரம்பு இத்தகைய கடனுதவிகளை ஓரளவு பாதிக்கலாம்'' என்று நிலவள வங்கிகள் கழகத்தலைவர் உதயபானு சிங் கூறினர்.

நிலங்களை விற்கத் தடை

இலட்சுமணபுரி, ஜூலை 12—

"நகரச் சொத்துக்களையோ, வேளாண்மை நிலத்தையோ பிறர் பெயருக்கு இன்னும் 3 திங்களுக்கு மாற்றக்கூடாது'

என்று உத்தரப் பிரதேச ஆளுநர் ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

"இப்படி மாற்றும் பத்திரங்களைப் பதிவாளர்கள் பதியக்கூடாது'' என்றும் இந்த அவசரச் சட்டம் கூறுகிறது.

நகரச் சொத்துக்கும் — நில உடைமைகளுக்கும் மேல் வரம்பு விதிக்கும் இரண்டு மசோதாக்கள் தற்போது மாநிலச் சட்டப் பேரவையின் முன் இருக்கின்றன; அதிலிருந்து தப்புவதற்காக விவசாய நில உடைமையையும் — நகரச் சொத்துடைமையையும் மாற்றுவதற்கு ஏராளமானபேர் முயற்சி செய்வார்கள் என்று கருதியே இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

மொத்தம் ரூ. 14 51 கோடிக்குப் புதிய வரிகள் போடப்பட்டிருக்கிறது; விவசாய வரி மட்டும் ரூ 8.25 கோடியாகும்.

இப்போது முதன்முதலாக உரம் — நெல் ஆகியவைகளுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் சுதந்தர வெள்ளிவிழா:

சென்னை மாநகராட்சியின் சிறப்புமிக்க திட்டங்கள்

வட்டங்கள்தோறும் தீவிர துப்புரவுகள்

சென்னை, ஜூலை 12—

சுதந்திரத்தின் வெள்ளி விழாத் திருநாளை விமரிசையாகக் கொண்டாடுவதென சென்னை மாநகராட்சி முடிவு செய்திருக்கிறது.

ஆகஸ்டு 14-ந் தேதியன்று நடுநிசி 12 மணிக்கு கூடும் (25 ஆண்டுகளுக்கு முன், அந்நேரத்தில்தான் இந்திய அரசிடம் அதிகாரத்தை பிரிட்டன் ஒப்படைத்தது); குடியரசுத் தலைவரின் செய்தி படிக்கப்படும்; பின்னர் உறுப்பினர்கள் உறுதிமொழியை ஏற்றுக்கொள்வார்கள்.

இத்திருநாளின் அடையாளமாகப் புதிய தேசியக் கொடியொன்றை அன்பளிக்குமாறு அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்படும்.

மேயர் சுதந்திர வெள்ளி விழா விருந்து நடத்துவார்.

ஆணையர் திட்டம்

மாநகராட்சி ஆணையர் சச்சிதானந்த ராவ், விழாவைக் கொண்டாடுவதற்கான திட்டமொன்றை அளித்திருந்தார்; அதை சபை ஏற்றுக் கொண்டது.

ஆகஸ்டு 15-ஆம் நாள் துப்புரவு வாரம் நடக்கும்; ஒவ்வொரு நாளும் நகரிலுள்ள ஒவ்வொரு உணவு விடுதியும் பார்வையிடப்படும்; நகரின் எல்லா வட்டங்களிலும் ஒரே சமயத்தில் தீவிர துப்புரவுத் தொண்டு மேற்கொள்ளப்படும்; தெருக்களில் பன்றிகள் — கால்நடைகள் சுற்றித் திரியும் தொல்லைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

ரிப்பன் கட்டடம் மூர் அங்காடி — விக்டோரியா மண்டபம் — நேப்பியர் பாலம் — கீழ்ப்பாக்கம் உயர் மட்டத் தொட்டி — பூங்காக்கள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்படும்; செடிகள் நடப்படும்.

நகரின் சிறந்த சாதனைகளை விளக்கும் சிறு வெளியீடு ஒன்றை கொண்டு வருவதும் இத் திட்டத்தில் சேர்ந்ததாகும்.

கட்டாய நெல் கொள்முதல்

மூன்று மாவட்டங்களில் இன்றுமுதல் ரத்து

முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 12—

செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் நடைமுறையில் இருந்துவரும் 15 சதவிகிதக் கட்டாய 'லெவி' நெல் கொள்முதல் முறை இன்றுமுதல் ரத்து செய்யப்படுகிறது.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் நேற்று இதனைத் தெரிவித்தார்; இதன் தொடர்பாக மேலும் அவர் கூறியதாவது:—

"தமிழ்நாடு அரசிடம் ஓர் இலட்சம் டன் அரிசியும் — இந்திய உணவுக் கார்ப்பரேஷனிடம் 30,000 டன் அரிசியும் கையிருப்பு உள்ளது; இதையடுத்து, இந்த மூன்று மாவட்டங்களிலும் லெவி முறை ரத்து செய்யப்படுகிறது.

ஆனால், தஞ்சை மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள 25 சதவிகித லெவி நெல் கொள்முதல் முறை தொடர்ந்து செயலில் இருக்கும்.

அவ்வாறே, கன்னியாகுமரி—திருநெல்வேலி—மதுரை ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் நடைமுறையில் உள்ள 15 சதவிகித லெவி நெல் கொள்முதல் முறையும் தொடர்ந்து நீடிக்கும்.

பர்மாவில் அரசியல் கைதிகள் விடுதலை

இரங்கூன், ஜூலை 12—

இரங்கூன் — மோலமின — மாண்டலே சிறைகளிலிருந்த அரசியல் கைதிகளை பர்மிய அரசு விடுதலை செய்தது.

இனிமேல் இவர்களைக் காவலில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

இரஷ்யாவுக்கு அமெரிக்கக் கோதுமை

"அடுத்த மூன்று ஆண்டுகளில் அமெரிக்காவிடமிருந்து ரூ. 35 கோடி பெறுமானமுள்ள தானியம் வாங்கிக்கொள்ள இரஷ்யா ஒப்புக்கொண்டிருக்கிறது'' என்று குடியரசு தலைவர் நிக்சன் அறிவித்தார்.

"இந்த உணவுத் தானிய உடன்படிக்கை இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக உறவு வளர்ச்சியடைய மிக முக்கியமான — உருப்படியான ஒரு நடவடிக்கை'' என்று, நிக்சன் கருதுவதாக அமெரிக்கத் தலைவர் ஜனாதிபதி மாளிகை அறிக்கை கூறியது.

'அர்த்தால்' என்ற பெயரால் அர்த்தமற்ற கிளர்ச்சி

[★]

அமைதியாக நடந்திருந்தால் 14 போலீசார் காயம்படுவானேன்?

இந்திரா காங்கிரசின் இரட்டை வேடம் அம்பலமாயிற்று

சென்னை, சூலை 10—

தமிழ்நாட்டில் தி. மு. கழக ஆட்சிமீது காழ்ப்புக் கொண்டவர்களெல்லாம் கூட்டுச் சேர்ந்து, 'விவசாயிகள் கிளர்ச்சி' என்ற பெயரால் நடத்திய வன்செயல்--வெறியாட்டங்களைக் கண்டித்தும், தி. மு. கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் மேலும் சில ஆங்கில நாளிதழ்கள் தலையங்கம் தீட்டியிருக்கின்றன.

ஏற்கனவே, 'இந்துஸ்தான் டைம்ஸ்', 'எக்னமிக் டைம்ஸ்', 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆகிய ஆங்கில நாளிதழ்கள் எழுதிய தலையங்கங்கள் 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டன.

இப்போது, 'பைனான்சியல் எக்ஸ்பிரஸ்,' 'அமிர்த பஜார் பத்திரிகா,' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்,' 'மெயில்' ஆகிய ஏடுகள் எழுதியுள்ள தலையங்கங்களின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது :—

அரசியல் ஆதாயம் தேடும் முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு!

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 8—7—72-ம் நாள் இதழில் எழுதப்பட்டிருக்கும் தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது :—

"தமிழ்நாட்டில் விவசாயிகள் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிச் சூடு போன்ற துர்ப்பாக்கியவசமான சம்பவங்கள் குறித்துத் தனித்தனியே நீதி விசாரணை நடத்தத் தமிழக அரசு உடனடியாக உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

'துப்பாக்கிச் சூடு நடத்தியது அத்துமீறிய செயலா--நியாயமானதுதானா' என்பது பற்றியெல்லாம் விசாரித்து முடிவு செய்யவேண்டியது நீதித் துறையின் பொறுப்பாகும்.

விவசாயிகள் கிளர்ச்சியில், சரியோ தவறோ--எது எப்படியிருப்பினும், இந்திரா காங்கிரசின் தூண்டுதலுடன் வலதுசாரி கம்யூனிஸ்டு மற்றும் சோஷலிஸ்டு போன்ற பல்வேறு கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தச் சோக சம்பவத்திலிருந்து தங்களால் முடிந்த மட்டும் கூடுதலான அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்கின்றன என்பதென்னவோ வெளிப்படை!

குறிப்பாக இந்த விவகாரத்தில், இந்திரா காங்கிரசின் குற்றம் கண்டுபிடிக்கும் முறைகேடான போக்கு கண்டிக்கத்தக்கது.

"மாநிலத்தில் பற்றாக்குறையான நிதி நிலைமையைச் சரிசெய்யும் பொருட்டு விவசாயத்திற்கான மின் கட்டணத்தை உயர்த்துவதென்ற தி. மு. கழக அரசு மேற்கொண்ட முடிவில், மத்திய அரசுக்கும் பங்கு உண்டு" என்பதை அனைவரும் அறிவர்; இருந்தும்கூட, துப்பாக்கிச் சூடு சாவை அரசியல் ஆதாயமாக்கிக்கொள்ளும் முயற்சியில், தமிழக அரசின் மீது குற்றம் சாட்டும் பணியை முதலில் மேற்கொண்டிருப்பவர் அகில இந்திய இந்திரா காங்கிரசின் தலைவரான டாக்டர் சங்கர் தயாள் சர்மாவே தவிர, வேறு எவருமலர்!

அரசியல் சந்தர்ப்பவாதத்தின் மிகக் கீழ்த்தரமான நிலைக்கு அவரது இந்த நடத்தை எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தி. மு. க.-மீது நமக்குத் தனி அபிமானம் எதுவும் கிடையாது; உண்மையில் அதனுடைய பல கொள்கைகளை நாம் கடுமையாக விமர்சித்திருக்கிறோம்; ஆயினும், மத்திய அரசின் பக்கபலத்துடன் மற்றொரு மாநில அரசைக் கவிழ்க்கும் பொருட்டு இந்திரா காங்கிரசு இவ்வளவு கீழ்த்தரமாக நடந்துகொள்வது, நாட்டின் அரசியல் சூழ்நிலையைக் களங்கப்படுத்திவிடும் என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அரசியல் உள்நோக்கத்துடன் நடைபெறுகின்றன என்று தமிழக முதலமைச்சர் கூறுவது முற்றிலும் நியாயமானதேயாகும்.

அதிகார ஆசைக்கு ஓர் எல்லை கிடையாதா?"

வன்முறைச் செயலால் பிரச்சினைக்கு பரிகாரம் எப்படி ஏற்படும்?

'மெயில்' 7—7—72-ம் நாள் இதழில் எழுதப்பட்டிருக்கும் தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது :—

"ஆயிரக்கணக்கில் ஆட்கள்கூடித் தொல்லை விளைவிக்கும் கும்பலாக மாறும்போது அதைச் சமாளிக்கப் போலீசாருக்குத் துப்பாக்கிச்சூடு நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

கோவையிலும், துப்பாக்கிச்சூடு நடந்த பிற இடங்களிலும் கிளர்ச்சியாளர் கும்பல்கள் எல்லாவிதத்திலும் மிகவும் மோசமாக நடந்துகொண்டிருக்கின்றன.

அவற்றால் மேலும் தீங்குகள் நேராது தடுக்கப் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டிருக்கிறது.

போலீசார் தேவைக்கும் அதிகமாக ஆயுதப் பிரயோகம் செய்தார்களா அல்லவா என்பது, நீதி விசாரணைக்கென நியமிக்கப்பட்டிருப்பவர்கள் விசாரித்து முடிவுகட்ட வேண்டிய ஒன்றாகும்.

அது எப்படியிருப்பினும், துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடத்துமாறு உடனுக்குடன் உத்தரவிட்டுள்ள மாநில அரசின் செயலானது கண்டிப்பாகப் பாராட்டுக்குரியதாகும்.

இப்போது நம்முன் உள்ள கேள்வி, 'அடுத்து என்ன?' என்பதேயாகும்; மேலும் வன்முறைச் செயல்களைப் புரிவதால் பரிகாரம் கிடைக்காது என்பது வெளிப்படை; எந்த அரசுக்கும் வன்முறைக்குப் பணிந்து கொடுப்பது சாத்தியமாகாது; ஆகவே, அமைதியான முறையில் மட்டுமே கோரிக்கைகளைப் பெற முடியும் என்பதை விவசாயிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

விவசாயிகளின் பிரதிநிதிகளுடன் பிரச்சினைகள் குறித்து விருப்பு--வெறுப்பற்ற நடுநிலை மனப்பான்மையுடன் விவாதிக்கத் தயாராக இருப்பதாக முதலமைச்சர் கூறியிருக்கிறார்; அப்படியிருக்க, நியாயமான கோரிக்கைகள் திருப்திகரமாக விவாதிக்கப்படவோமாட்டாது என்று கருதக் காரணமில்லை.

ஆனால், அரசாங்கத்திற்கும் சங்கடங்கள் இருக்கின்றன என்பதை கோரிக்கைகளை முன்வைப்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

"விவசாயத்திற்கான மின்கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள உயர்வு அப்படி ஒன்றும் கசக்கிப்பிழிவது அல்ல--பிற மாநிலங்களில் உள்ள அளவுக்குக் கடுமையானது அல்ல' என்றும் தமிழக அரசு கருதுகிறது.

மேலும், இப்போதுள்ள கட்டண உயர்வைக் காட்டிலும் கூடுதலாகக் கட்டண விகிதங்களை உயர்த்துமாறு மத்திய அரசு, தமிழக அரசிடம் வற்புறுத்தியுள்ளது!

இதுபற்றிய பரிசீலனைகளும் முடிவுகளும், விவாதம்--பேச்சுவார்த்தை போன்ற அமைதியான முறையிலேயே நடைபெற வேண்டும்."

கொள்கைக்கு மாருக இ. காங்கிரசு-- அரசியல் உள்நோக்கம் கொண்டது

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'அமிர்த பஜார் பத்திரிகா' 7—7—72-ம் நாள் தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது :—

"சென்ற புதன்கிழமையன்று தமிழ்நாட்டின் பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதன் விளைவாக 14 பேர் மரணமடைந்தது குறித்து இந்திரா காங்கிரசுத் தலைவர் நீதி விசாரணை கோரியிருப்பதற்குக் காரணம் இருக்கக்கூடும்; ஆனால், 24 மணி நேரக் கடையடைப்புச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்ட மாநில விவசாயிகள் செயற்குழு, அன்றையத்தினம் தமிழ்நாட்டில் நடைபெற்ற துர்ப்பாக்கியமான சம்பவங்களுக்குப் பொறுப்பேற்றுக்கொள்வதிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது.

இந்தக் கடையடைப்பிற்குப் பின்னணியாக இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையை வைத்துப் பார்த்தால், இத்தகைய விளைவுகள் எதிர்பார்க்கக்கூடியவையாகவே இருக்கின்றன.

இந்திரா காங்கிரசு--தி.மு.க. தேர்தல் உடன்பாடு முறிந்ததிலிருந்து அடிக்கடி வன்முறைகள் தலைதூக்கியிருக்கின்றன; தொழிற்சாலைகளிலும் வன்முறைகள் தலைதூக்கியிருக்கின்றன; இந்தப் பின்னணியில், 'விவசாயிகளின் போராட்டக் குழு கடையடைப்பு நடத்தியது புத்திசாலித்தனமான செயல்' என்று எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

தன்னுடைய கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஆளும் கட்சி உறுதியாக இருக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

இந்தச் சூழ்நிலையில், விவசாயிகள் சங்கச் செயற்குழுவின் கடையடைப்புக்கு முழு ஆதரவு கொடுத்த எல்லா அரசியல் கட்சிகளும் அன்று நடைபெற்ற வன்முறைகளுக்கும்--எதிர் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பு ஏற்கவேண்டியவர்களாக இருக்கின்றன!

கிடைக்கின்ற சான்றுகளை வைத்துப் பார்க்கும்போது, 'கடையடைப்பு அமைதியான முறையிலும்--ஒழுங்கான விதத்திலும் நடத்தப்பட்டது என்று அதைத் தொடங்கியவர்கள் சொல்லுகின்ற கூற்றை நம்புவது கடினமாக இருக்கிறது.

கிளர்ச்சிக்காரர்கள் அமைதியாக நடந்துகொண்டிருந்தால், அன்றைய தினம் கல்வீச்சு காரணமாக 14 போலீசார் கடுமையாகக் காயம்படுவானேன்?

இந்த விவகாரத்தில் வியப்புக்குரியது என்னவென்றால், இந்திரா காங்கிரசு தன் கொள்கைக்கு மாருக விவசாயிகள் கிளர்ச்சிக்குத் தனது ஆதரவைக் காட்டியிருப்பதுதான்!

விவசாயிகள் சங்கம் போராட்டம் நடத்தக் காரணமாயிருக்கின்ற தி மு கழக அரசின் விவசாய மின் கட்டண உயர்வு--தீவிர கடன் பாக்கி வசூல் போன்ற முடிவுகள் எல்லாம் பசுமைப் புரட்சியின் பயனாகக் கிராமப் பகுதிகளில் வளர்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்திலிருந்து கூடுதலான வருமானத்தைப் பெற வழிகாணுமாறு மத்திய அரசு வற்புறுத்தியதன் விளைவுதான்!

மத்திய அரசு வற்புறுத்தியதன் காரணமாக, இந்திரா காங்கிரசு ஆளுகின்ற மாநிலங்களிலேயெல்லாம்கூட, இதுபோன்று கிராமப் பகுதிகளிலிருந்து கூடுதலான வருமானம்பெற வரிகளை உயர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிடுவது இந்த விவகாரத்திற்குப் பொருத்தமற்றதாகாது.

ஆகவே, தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரசு மேற்கொண்டுள்ள நிலை, அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றுதான் கூறவேண்டும்.

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரசு இரட்டை வேடம் போடுகிறது என்று தமிழக முதல்வர் குற்றஞ்சாட்டுவதில் எவ்விதத் தவறும் இல்லை."

சந்தர்ப்பவாதிகளின் செயலே சங்கடங்கள் ஏற்பட்டதற்குக் காரணம்

3—7—72 'பைனான்சியல் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கும் தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு :—

"விவசாயக் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக எதிர்க் கட்சிகள் கடைப்பிடித்த 24 மணி நேரக் கடையடைப்பின் விளைவாகச் சட்டத்திற்கும்--அமைதிக்கும் விடுக்கப்பட்ட அறைகூவலுக்குக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர தமிழக அரசுக்கு வேறு வழியில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

கடையடைப்பை முறியடிப்பதற்காகப் போலீசை நடத்திச் செல்லும் காரியங்களையே ஆளும் கட்சிக்காரர்கள் மேற்கொண்டதாக சில எதிர்க் கட்சித் தலைவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்; இந்தக் குற்றச்சாட்டு நிச்சயமாக அரசியல் உள்நோக்கத்தின் காரணமாகவே சொல்லப்படுவதாகும்.

கிளர்ச்சி செய்கின்ற விவசாயிகளுக்கு சில எதிர்க் கட்சிகள் துணைபோயிருப்பது அரசியல் சந்தர்ப்பவாதமாகும்.

மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் தொழில் தகராறுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற இந்த அரசு மட்டுமல்ல--வேறு எந்த அரசுமே சமூக வாழ்க்கையை நிலைகுலையச் செய்வதற்காக வேண்டுமென்றே மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சென்ற மாதம் சோமப்புத்தூரில் மாட்டு வண்டி முற்றுகை நடத்தி நகரப் போக்குவரத்தை நிலைகுலையச் செய்த நிகழ்ச்சியானது, 'இந்தக் கிளர்ச்சி, அரசாங்கத்துக்குச் சங்கடங்கள் கொடுத்து அதனால் அரசியல் இலாபம் பெறுகின்ற அரசியல் சந்தர்ப்பவாதிகள் கையில் சிக்கிவிட்டது' என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

தமிழ்நாட்டில் உயர்த்தப்பட்ட மின் கட்டண விகிதம், நாடெங்கிலும் உள்ளதைவிட குறைந்தது என்றும், மின்சார வாரியத்தின் உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டதால்தான் இப்படி மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது என்றும் அரசாங்கம் விளக்கம் அளித்திருக்கிறது; அது சரியானதும்கூட.

நிலைமை அப்படியிருந்தும், முதலமைச்சர், 'சிலாப்' முறையைச் செயலுக்குக் கொண்டுவந்தார்; மானாவாரி நிலங்களுக்கு அடிப்படை நில உரிமையை ரத்து செய்தார்; விவசாய வருமான வரி குறித்தும்--கடன்களைத் தள்ளுபடி செய்வது குறித்தும் உள்ள சங்கடங்களை கவனிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

எதிர்க் கட்சிகள், 'இந்தச் சலுகைகள் போதுமானவை அல்ல' என்று கூறுகின்றன; எப்படிச் சிந்தித்துப் பார்த்தாலும், எதிர்க் கட்சிகளின் இந்தக் கூற்று நியாயமெனத் தோன்றவில்லை.

தொழிலதிபர்களைவிட விவசாயிகள் கொஞ்சமாகச் சலுகைகள் பெறுகிறார்கள் என்பது, முற்றிலும் நியாயமற்ற வாதம்; மின் கட்டணத்திலாகட்டும்—அல்லது நிதி உதவியிலாகட்டும்--ஆட்சியாளர்கள், தொழில் துறையைவிட விவசாயத் துறைகளுக்குத்தான் அதிகச் சலுகைகளைத் தந்திருக்கிறார்கள்.

ஒருவேளை அரசாங்கம் அவர்களது கோரிக்கைகளைக் கவனிக்க மறுத்திருந்தால், விவசாயிகள் மேற்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள் நியாயமானதாக இருக்கும்; அதற்கு மாருக, மாநிலத்தின் மொத்த நலனை மனதிலே வைத்து--தன்னுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டு--அரசு என்னென்ன சலுகை வழங்க முடியுமோ அவைகளையெல்லாம் வழங்க முன்வந்திருக்கிறது.

அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்ற எந்தவிதச் சமாதானப் போக்கும் விவசாயிகளை உடன்படச் செய்யவில்லை என்பது பரிதாபத்திற்குரியதாகும்; இதற்கான காரணங்களும் முற்றிலும் வெளிப்படையானவையே.

குறுகிய அரசியல் நோக்கத்தைவிட்டு--பிரச்சினையின் உண்மைத் தன்மையை வைத்து டில்லி செயல்பட வேண்டும்."

இந்திரா காங்கிரசின் நீலிக் கண்ணீர்

கழக அரசைக் கவிழ்க்கும் சதிக்கு எடுத்துக்காட்டு

நம்பூதிரிபாடு குற்றச்சாட்டு

திருவனந்தபுரம், சூலை 11—

"இந்தியா முழுவதிலும் தமிழ்நாட்டில் மட்டும்தான் காங்கிரசு அல்லாத ஆட்சி நடக்கிறது; இதை, இந்திரா காங்கிரசுக்காரர்களால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

"எல்லா மாநிலங்களிலும் இந்திரா காங்கிரசு ஆட்சி வர வேண்டும் என்று அவர்கள் விரும்புவதை இது அம்பலப் படுத்திவிட்டது.

"சிறிது காலத்திற்கு முன்புதான் ஓரிசாவில் இருந்த கூட்டணி ஆட்சியை இந்திரா காங்கிரசார் கவிழ்த்துவிட்டனர்; இப்போது, தமிழ்நாட்டில் தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்கிறார்கள்.

'தமிழ்நாட்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினால் அதிர்ச்சி அடைந்திருப்பதாக இந்திரா காங்கிரசுத் தலைவர்கள் நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்; ஆனால், சில நாட்களுக்குமுன் உத்தரப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூடு நடைபெற்று--ஏராளமான பேர் கொல்லப்பட்டபோது, எந்தக் காங்கிரசுக்காரராவது அதிர்ச்சியடைந்ததாகக் கேட்டிருக்க முடியுமா?

"'மின் கட்டணத்தை அதிகப்படுத்துங்கள்' என்று மத்திய அரசு, மாநில அரசை வற்புறுத்துகிறது; பின்னர், மின் கட்டண உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்தும்படி தங்கள் கட்சிக்காரர்களை இந்திரா காங்கிரசு தூண்டிவிடுகிறது; இது கண்டிக்கத்தக்கதாகும்"

என்று இடது கம்யூனிஸ்டுத் தலைவர் நம்பூதிரிபாடு, இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுக் கூறினார்.

பள்ளிச் சிறார்கட்குத் தனிப் பேருந்து

சென்னை நகரில் விட ஏற்பாடு

சென்னை, சூலை 11—

சென்னையில் 'பல்லவா பஸ் போக்குவரத்துக் கழகம்' பள்ளிக்கூடங்களுக்குச் சென்று வரும் சிறுவர்--சிறுமிகளுக்காகத் தனிப் பஸ்கள் விட ஏற்பாடு செய்திருக்கிறது.

முதல் கட்டமாக 15 சிறுவர் பஸ்கள் விடப்படுகின்றன; இதில் பள்ளிக்கூடங்களில் 8-வது வகுப்பு வரை படிக்கும் சிறுவர்--சிறுமிகள் மட்டும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்; சிறுவர்கள் நீங்கலாக வேறு எவரும் இந்த பஸ்களில் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இந்தப் பஸ்களில் பயணம் செய்ய மாதம் ரூ. 10 கட்டணம் உள்ள 'சீசன் டிக்கெட்' வழங்கப்படும்; இந்த டிக்கெட்டை வைத்துக்கொண்டு சிறுவர்களுக்காக விடப்படும் எந்த பஸ்சிலும்--அது புறப்படும் இடத்தில் இருந்து போய்ச் சேரும் இடம்வரை--பயணம் செய்யலாம்.

'சீசன் டிக்கெட்' தேவையில்லை என்று கருதுபவர்கள் நாள்தோறும் கட்டணம் செலுத்திப் பயணம் செய்யலாம்.

இந்தப் பஸ்கள், பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்களுக்கு வசதியாகக் காலை 8-25 மணியிலிருந்து 8-45 மணிவரை வெவ்வேறு இடங்களுக்கு--வெவ்வேறு நேரங்களில் புறப்படும்.

மாலையில் 4-05 மணியிலிருந்து 4-35 மணிவரை இந்தப் பஸ்கள் விடப்படும்; காலையில், எந்த இடத்துக்குப் பஸ் போய்ச் சேருகிறதோ அங்கிருந்து மாலை பஸ்கள் புறப்படும்.

முதலமைச்சர்--விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

சூலை 13ல் சென்னையில் நடைபெறும்

செயற்குழுவினர் கடிதத்திற்கு முதலமைச்சரின் தனிச் செயலாளர் பதில்

சென்னை, சூலை 12—

விவசாயிகள் சங்கப் போராட்டச் செயற்குழுவினர் எழுதிக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க செயற்குழுவினரைச் சந்தித்துப் பேச முதலமைச்சர் கலைஞர் ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்.

விவசாயிகள் போராட்டச் செயற்குழு அமைப்பாளர் நாராயணசாமி நாயுடு, முதலமைச்சரைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துக் கடிதம் ஒன்று எழுதினார்; அந்தக் கடிதத்திற்கு முதலமைச்சரின் தனிச் செயலாளர் எழுதியுள்ள கடிதத்தில்தான் இந்த ஒப்புதல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"சூலை 13-ம் நாள் வியாழக்கிழமை மாலை 4-மணியளவில், அரசுத் தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வசதியாக இருக்கும்" என்று செயற்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகள் சங்கச் செயற்குழு அமைப்பாளர் நாராயணசாமி நாயுடு எழுதியுள்ள கடிதத்தில், செயற்குழுவில் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை அனுப்பியதுடன்--தமிழக அரசு பேச்சு நடத்தவேண்டிய திர்மான வாசகங்களையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

அந்தக் கடிதத்திற்கு முதலமைச்சரின் தனிச் செயலாளர் எழுதிய பதில் கடிதத்தின் விவரமாவது :—

"அன்புடையீர்--வணக்கம்; தாங்கள் முதலமைச்சருக்கு அனுப்பிவைத்த விவசாயிகள் போராட்டச் செயற்குழுதான் தீர்மானங்களும்--தாங்கள் எழுதியுள்ள கடிதமும் கிடைக்கப்பெற்று--அவைகளை முதலமைச்சர் பார்வையிட்டார்.

"அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாங்கள் இப்போது முன்வந்துள்ளதை முதல்வர் வரவேற்ருர்.

"பேச்சுவார்த்தைக்கு முன்பு--நிபந்தனை விதிக்கும் வகையில்--சில காரியங்கள் நடத்தப்படவேண்டும் என்று அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளீர்கள்.

"அவைகள் அனைத்தையும் பேச்சுவார்த்தையின்போது விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்றும், தங்கள் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சூலை 13-ம் நாள் மாலை 4-மணிக்குத் தலைமைச் செயலகத்தில் வசதியாக இருக்கும் என்றும் முதல்வர் தங்களுக்குத் தெரிவிக்கக் கோரியுள்ளார்; இதற்குத் தங்களின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது."

முதலமைச்சர்-- செய்தியாளர் சந்திப்பு

இந்தக் கடிதம் அனுப்பப்பட்ட விவரத்தை செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் நேற்று தெரிவித்தார்.

செய்தியாளர் :—"பேச்சுவார்த்தைக்கு முன்பு நிபந்தனை விதிக்க வேண்டாம் என்று பதில் கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறதே--என்ன நிபந்தனையை நாராயணசாமி நாயுடு தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்?"

முதல்வர் :—"செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தில், பேச்சுவார்த்தை நடத்துவதற்குமுன் சில நிபந்தனைகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தன; 'போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யவேண்டும்--வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும்--துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் குடும்பத்தினருக்கும், காயமடைந்தும், சேதத்திற்கு ஆளானவர்களுக்கும் நட்ட ஈடு வழங்க வேண்டும்' என்றும் அந்தத் தீர்மானத்தில் இருக்கிறது.

"இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், உயிரிழந்தோர் குடும்பங்களுக்குப் பண உதவிசெய்ய என்றைக்குமே தயக்கம் காட்டியது இல்லை; இரண்டாண்டுகளுக்கு முன்பு பெருமாநல்லூர் துப்பாக்கிக் குண்டிற்குப் பலியானவர்கள் குடும்பத்திற்கு மாநில அரசின் சார்பில் பண உதவி அளித்தபோது, அவர்கள் அதனை வாங்கிக்கொள்ளக்கூடாது எனத் தடுத்து விட்டார்கள்.

செய்தியாளர் :—பேச்சுவார்த்தைக்கு விவசாயிகள் செயற்குழு அமைப்பாளர் நாராயணசாமி நாயுடு மட்டும் வருவாரா? மற்ற தலைவர்களும் வருவார்களா?"

முதல்வர் :—யார் யார் வருகிருர்கள் என்பதை அவர்கள் முடிவு செய்து தெரியப்படுத்துவார்கள்; செயற்குழுவினரின் இதர கோரிக்கைகளைக் குறித்துப் பேச்சுவார்த்தையில்தான் விவாதிக்க வேண்டியிருக்கிறது."

செய்தியாளர் :—சுப்ரீம் கோர்ட் நீதிபதி அல்லது வெளிமாநில நீதிபதிகளைக்கொண்டு நீதி விசாரணைக்கு உத்தரவிடவேண்டும்; இல்லாவிட்டால் இந்த நீதி விசாரணையைப் பகிஷ்கரிப்பது என்று செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியதே--அது பற்றியும் பேச்சுவார்த்தைக்கான முன் நிபந்தனையில் செயற்குழுவினர் கூறியிருக்கிருர்களா?"

முதல்வர் :—"பேச்சுவார்த்தைக்கான நிபந்தனையில் அவைகள் இல்லை."

புகார்களுக்கு முதல்வர் பதில்

"விவசாயிகள் சங்கச் செயற்குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தவும்--சந்திக்கவும் முதலமைச்சர் மறுக்கிறார்" என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கூறியதாவது:—

"ஏப்ரல் திங்கள் இறுதியில், முதலில் கிருஷ்ணசாமி கவுண்டருடனும்--மற்றவர்களுடனும் பேசினேன்; மறுநாள் மன்றாடியாருடனும்--மற்ற தலைவர்களுடனும் சென்னையில் பேசியிருக்கிறேன்; அதற்குப்பின் மே திங்களில் கோவையில் கிருஷ்ணசாமி கவுண்டரிடமும்--மற்ற தலைவர்களிடமும் இதுபற்றிப் பேசியிருக்கிறேன்; பிறகு, சூன் 3-ம் நாள் என் பிறந்த நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று அறிக்கை விட்ட குமாரசாமி எம். எல். ஏ.-யை அந்த வாரத்திலேயே சந்தித்துப் பேசியிருக்கிறேன்; அதற்கு இரு வாரம் கழித்து, கோவை சுப்பிரமணியம் எம். எல். ஏ.-வுடன் பேசியிருக்கிறேன்.

கோவைக் கலெக்டரிடம், 'போராட்டம் நிறுத்தப்பட்டது' என்று எழுதித் தந்துவிட்டு என்னைச் சந்தித்துப் பேசுவதாகச் சொன்னவர்கள், மறுநாளே, 'போராட்டம் நிறுத்தப்படவில்லை--ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லி பேச்சுவார்த்தை முறிவடையக் காரணமாக இருந்தார்கள்.

பிறகு நான் சலுகைகளை அறிவித்தபோது, 'அந்தச் சலுகைகள் பற்றிப் பேசி முடிவெடுக்க, சூன் 26-ந் தேதி நடைபெறும் விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சிறையிலிருக்கும் போராட்டக் குழு உறுப்பினர்களை, விடுதலை செய்யவேண்டும்' என்று சின்னதுரை தந்தி கொடுத்தார்; 'பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அறிகுறியாக இருக்கட்டும்' என்று சின்னதுரை தந்தியை ஏற்று--போராட்டக் குழு உறுப்பினர்களை எல்லாம் அரசு விடுதலை செய்தது.

அதற்குப் பிறகும், பார்வர்டு பிளாக் தலைவர் மூக்கையா தேவர் என்னிடம் பேசினார்; விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக அவரிடம் நான் சொன்னேன்; அவர் இரண்டு--மூன்று நாள் முயற்சியெடுத்து, 'அந்த முயற்சி எப்படித் தோல்வியடைந்தது' என்பதை விளக்கி அறிக்கை வெளியிட்டார்.

அதற்குப்பிறகு பூவராகன் எம்.பி. என்னைச் சந்தித்தார்; 4-ம் நாள் இரவு 8 30 மணிக்குக் கோட்டையில் என்னைச் சந்தித்துப் பேச தேதி நேரம் குறித்துக் கொடுத்தேன்; இரவு பூவராகன் மட்டும் வந்து, 'அவர்கள் வருவதாக இல்லை' என்று கூறிச் சென்ருர்.

இதன் தொடர்பாக இவ்வளவு நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது, 'நான் அவர்களைச் சந்திக்கத் தயாராக இருந்திருக்கிறேன்--பல முறைச் சந்தித்தும் இருக்கிறேன்' என்பது அனைவருக்கும் தெளிவாகுமென்று நம்புகிறேன்."

இந்திரா காங்கிரசு ஆளும் மாநிலத்தில்....

விவசாய மின்சாரக் கட்டணம் உயர்வு

ஆந்திர சட்டமன்றத்தில் அமைச்சர் அறிவிப்பு

ஐதராபாத், சூலை 11—

இந்திரா காங்கிரசுக் கட்சி ஆளுகின்ற ஆந்திர மாநிலத்தில் விவசாயப் பம்பு செட்டுக்கான மின்சாரக் கட்டணத்தை யூனிட்டுக்கு 12 காசுகளிலிருந்து 16 காசுகளாக உயர்த்தப்படுகிறது.

இந்தக் கட்டண உயர்வை சூன் 1-ந் தேதி முதல் செயல்படுத்த ஆந்திர மின்சார வாரியம் முடிவு செய்திருந்தது; ஆனால் மாநிலத்தில் தற்போது இருந்துவரும் வறட்சி நிலையையொட்டி, ஆகஸ்டு 1-ந் தேதி முதல் இந்தக் கட்டண உயர்வைச் செயல்படுத்த ஆந்திர அரசு முடிவுசெய்திருக்கிறது.

இந்தத் தகவலை, ஆந்திரச் சட்டமன்றத்தில் மின்சாரத் துறை அமைச்சர் திருமதி பி ஜெயப்பிரதா தெரிவித்தார்.

கட்டண உயர்வைக் கைவிட்டு விடும்படி எதிர்க் கட்சியினர் கூறியபோது அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு அதிகரித்துவிட்டது; எனவே கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை."

விவசாயத்திற்கு வழங்கப்படும் மின் கட்டணம்

'தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவு'

'மின்சார வாரியத்திற்கு இதனால் ரூ. 14 கோடி இழப்பு ஏற்படுகிறது'

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் விளக்கம்

சென்னை சூலை 12—

"விவசாயத்திற்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டணம் தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவானதாகும்; குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுவதால் மின்சார வாரியத்திற்கு ரூ. 14 கோடி இழப்பு ஏற்படுகிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் விளக்கிக் கூறியதாவது :—

"பம்பு செட்டுகளுக்குத் தரப்படும் குறைந்த அழுத்தமுள்ள மின்சக்தி--எல்லாச் செலவுகளும் சேர்த்து--யூனிட் ஒன்றுக்கு 22 காசு அடக்கமாகிறது; ஆனால் மின்சார வாரியம் 10 8 காசு--12 காசு என்று மட்டுமே கட்டணம் வசூலிப்பதால்--மானியம் கொடுத்தவகையில்--மின்சார வாரியத்திற்கு ரூ. 14 கோடி இழப்பு ஏற்படுகிறது."

மணி--சாமி குழுவினர் கலை நிகழ்ச்சிகள்

சூலை 12, 13 : தூத்துக்குடி; 14 : காந்தி கிராமம்; 15 : காரியாபட்டி; 16 : தல்லாகுளம்; 17 : அருப்புக்கோட்டை; 18 : கமுதி; 19 : அரும்புக்கோட்டை வட்டம்; 20 : விருதுநகர்.

குழுக் கூட்டம்

பெரியகுளம் வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் 13—7—72 மாலை 3 மணிக்கு தேனி பயணியர் மாளிகையில் நடைபெறும்; வட்டப் பிரதிகள் தவருது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் கேட்டுக்கொள்கிருர்.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 218/72

நிர்வாக அலுவலர்,
ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரசாமி கோயில்,
கும்பகோணம்:
தஞ்சாவூர் மாவட்டம் —மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் கும்பகோணம் நகரம் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரசாமி கோயில் விஷயமாக :—

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் கும்பகோணம் நகரம் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரசாமி கோயிலுக்குச் சொந்தமாக மாயூரம் வட்டம் பாலையூர் இடக்கியம் கிராமத்தில் சர்வே நெம்பர் 25, 26.2 ஆகிய இடங்களில் உள்ள இலுப்பை மரங்கள் 6—வேப்பு மரங்கள் 2—வில்வ மரம் 1—ஆகக் கூடுதல் 9 (ஒன்பது) மரங்களையும் ரூ. 400 என ஏலத் தொடக்க விலையாகக் கொண்டு பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு :—

நோட்டீஸ் மனு எண் 218/72 டி. 1
நாள் 17—6—1972

மேற்படி மனு குறித்து சென்னை-34 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 19—8—1972 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ அல்லது மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 16—8—1972 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக.

உங்கள் தீர்ப்புக்கு..

விவசாயிகள் சங்கத்தினரின் முக்கிய கோரிக்கைகளும் அதற்கான விளக்கங்களும் பின் வருமாறு!

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு தன் கடமையைச் செய்யும் வகையில், இந்த உண்மைகளை எடுத்துரைக்க முன் வந்துள்ளது.

மின்கட்டண விகிதம்: ஏற்கனவே அளிக்கப்பட்ட சலுகைகளின்படி, தமிழ் நாட்டிலுள்ள விவசாயி, பின் வருமாறு மின் கட்டணம் செலுத்துகிறார்.

5 குதிரை வரை ஆற்றலுள்ள பம்பு செட்டின் இயக்கத்தினால் மாதம் 200 யூனிட்டுக்கு மேற்பட்டும், அதற்கு மேற்பட்ட ஆற்றலுள்ள பம்பு செட்டுக்கு மாதம் 400 யூனிட்டுக்கும், அதிகப்படியாக உபயோகிக்கும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 10.8 காசுதான் செலுத்த வேண்டி வருகிறது. முதல் கட்டத்தில் கூட விவசாயி செலுத்த வேண்டிய கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 12 காசுதான்.

இப்பொழுது இதர மாநிலங்களில் மின் கட்டண விகிதங்களை பார்ப்போம்:

மாநிலங்களின் பெயர்	வரி உட்பட ஒரு யூனிட்டுக்கு கட்டண விகிதம்
குஜராத்	17.01 காசு
அரியானா	15.00 ,,
மத்திய பிரதேசம்	13.00 ,,
மகாராட்டிரம்	18.00 ,,
மைசூர்	12.00 ,,
பஞ்சாப்	12.87 ,,
ராஜஸ்தான்	13.30 ,,
உத்திர பிரதேசம்	23.51 ,,
மேற்கு வங்கம்	19.00 ,,
ஆந்திரா	16.00 ,,

கடன் வஜா: தமிழ்நாடு அரசு விவசாயிகளுடைய சகல கடன் பாக்கிகளையும் வஜா செய்ய வேண்டுமென்ற ஒரு அசாத்தியமான கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இருந்தாலும், எங்கெங்கே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இருக்கிறதோ அங்குள்ள விவசாயிகளுக்கு, கடன் வசூல் ஒத்திவைப்பு, தவணை நீடித்தல் போன்ற சலுகைகளை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஆணை தரப்பட்டுள்ளது.

உணவு, கொள்முதல் பங்கீட்டுக் கழகம்: இன்னொரு கோரிக்கை என்னவென்றால், விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கமே விலை நிர்ணயம் செய்து கொள்முதல் பொறுப்பை ஏற்று, விற்பனை செய்ய வேண்டும் என்பதாகும். இதற்கு முதல் கட்டமாகத்தான் முதலமைச்சர் தனது பட்ஜட் உரையிலேயே, மாநில அளவில் ஒரு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் (உணவு கொள்முதல் பங்கீட்டுக் கழகம்) ஆரம்பிக்கப்பட்டு, இந்த ஆண்டிலேயே செயல்படத் தொடங்கும் என்று அறிவித்துள்ளார்.

விவசாய வருமான வரி: மாநில அரசு தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ள விவசாயத்துறை மீது வரி விதிக்க வேண்டும் என்று, மத்திய அரசும், நாட்டின் திட்டக் குழுவும் அடிக்கடி வற்புறுத்திய வண்ணம் இருக்கின்றன. அதனால்தான் பணப்பயிர் அடிப்படையில் விவசாய வருமான வரி விதிக்கப்பட்டு, இந்த வரி பணக்கார நிலச் சுவான்தார்கள்தான் கட்ட வேண்டியிருக்கும். ஏழை விவசாயிகளை, அதாவது $7\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கர்வரை நிலம் சாகுபடி செய்கின்ற விவசாயிகளை, இந்த வரி பாதிக்காது.

பயிர் / கால்நடைகள் இன்சூரன்ஸ்: கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், பயிர்கள்/கால்நடைகள் பாதுகாப்பு இன்சூரன்ஸ் செய்யப்பட வேண்டும் என்றும், பம்புசெட்டுகள், ரசாயன உரங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கலால் வரியை குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இந்த கோரிக்கைகளை கவனிக்க மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது. மத்திய அரசுக்குத்தான் இந்த கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டிய அதிகாரமும் பொறுப்பும் உள்ளது.

விவசாயிகள் சங்கத்தினரின் வேறு சில கோரிக்கைகளும், இதுபோலவே, மத்திய அரசின் மேற்பார்வைககு உட்பட்டவைதான்.

பயிர் செய்யவும், வீடுகட்டிக் கொள்ளவும், காட்டு நிலங்களையும் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களையும் விவசாயிகளுக்கு ஒப்படை செய்தலில் தமிழகத்தின் சாதனை.

	1947-67	1967-72
வீட்டுமனை ஒப்படை எண்ணிக்கை	69,084	3,42,421
பயிர் செய்ய நில ஒப்படை ஏக்கராக்கள்	2,88,058	5,29,425
பயன் பெற்ற விவசாயிகள் எண்ணிக்கை	1,15,890	2,65,872

இப்பொழுது நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்!

தமிழ்நாடு, செய்தி,மக்கள் தொடர்பு இயக்குநரால் வெளியிடப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரிஅச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு; சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.